இறையரசு மலர

“அவர் உங்களுக்குச்
சொல்வதெல்லாம் செய்யுங்கள் யோவான்” 2:5

# DIOCESAN NEWS LETTER VELLORE

**(FOR PRIVATE CIRCULATION ONLY)**

**Vol. 15** **JULY - 2019** **No. 7**

**Dear Fathers, Brothers and Sisters,**

May St. Thomas the apostle bless us with missionary zeal and fervent. Let this celebration strengthen us in our faith and declare “My God and My Lord”.

The Extraordinary missionary month of October 2019 gets invigorated by the faith of St. Thomas. The apostle brought this faith to us and it is our duty to celebrate and to take it to the whole world. India itself is still far from fulfilling this dream. It is certainly a month to join our holy father Francis in his journey of evangelization. He reminds us of the apostolic courage needed to proclaim the Gospel, included he noted, “entails a commitment to respond to the new challenges of the present time. This was very well placed before us in our monthly recollection at Chetpet by Fr. Vinoth that it is not only our duty of protection of creation but also to evangelize the creation.

To witness to the new vigor of evangelization our diocese is delighted to celebrate the ordination of two of our deacons. Both have been doing their theology in France. In fact the Bishop of the diocese of Nancy and Toul will be here to ordain them. Our deacons Dn. C. Arun Kumar and Dn. S. Raj Kumar both will serve that diocese at least for about five years. We congratulate them and their parents. May the Lord bless them for their generosity. A special words of thanks to the seminary and its Rector Fr. Pascal Sarjas for his extraordinary concern and love for our students. Certainly our hearts are filled with gratitude for the diocese, the Bishop and all the priests.

St. Thomas hospital at Chetpet has received a great blessing from the Lord. They have been doing extraordinary mission in several parts of the world and certainly in our diocese. We remember them with gratitude the founding sisters and the present ones who are doing an excellent healing ministry. So far they were working as lay association but today the Holy Father Francis has elevated them as full-fledged 'Religious congregation'. The Church has recognized and approved their congregation their constitutions and regulations. Let us thank the Lord and congratulate them and assure them of our prayers. It was their extraordinary intervention that leprosy was almost eradicated and HIV is brought under control. May their ministry continue to grow. Let us pray that they will receive more vocation from our girls. They as a congregation will minister from the archdiocese of Bangalore.

In the journey of extraordinary missionary month, the Holy Father has encouraged to us undertake this Journey with Joy and youthful exuberance. In fact he asserts that sadness is not a Christian attitude. It is the Holy Spirit who ensures to continue in this renewal and to remain youthful in our faith. The Holy Spirit accompanies us in life and sustains us. He who is near us supports us and keeps our spirit youthful.

The Pope further encourages us saying even if we are sinners, the Spirit helps us to repent and look ahead. He certainly warns us saying that sin ages one, the soul ages and everything ages. In life there are difficult moments, we feel that the Spirit helps us to move forward and to overcome the difficulties, even martyrdom.

He encourages us in these word ‘ Let us ask the Lord not to lose this renewed youthfulness, not to be Christians who have retired and lost their joy, for a Christian never retires, a Christian lives because he is young – when he is a true Christian’.

May our Mother accompany us in this journey of evangelization.

Yours in Christ Jesus,

**+ Most Rev. Dr P. Soundararaju, SDB**
Bishop of Vellore

## Bishop's Programme

02 Madha T. V.
03 Chetpet Hospital
04 Wedding, Mazhuvankarunai
05 Loyola College, Vettavalam
06 – 11 TNBC – Meeting, Coiambator
13 CRI Meeting – Vellore
14 Confirmation, Arakkonam
15 Jawadhu Hills
17 Correspondent Meeting – English Medium Schools
20 Priestly Ordination – Cathedral
22 Passionist Sisters
27 Pious Association, Chetpet
30 Sisters Bridgetine, Sipcot
31 Recollection, Vellore

**+ Most Rev. Dr P. Soundararaju, SDB**
Bishop of Vellore

# Vicar General's Office

## CRI Meeting

The CRI meeting will take place on Saturday, 13 July 2019. All the Religious Superiors & Principals and the Vicar Foranes are expected to attend the meeting without fail.

## Priestly Ordination (20 July 2019)

The Priestly Ordination of **Dn. C. Arun Kumar** and **Dn. S.Raj Kumar** who are studying in France will take place on Saturday, 20 July 2019 in Assumption Cathedral Church, Vellore at 10.00 a.m.

## Monthly Recollection

Monthly Recollection for the month of July will be on Wednesday 31 July, 2019 in the Bishop's House.

## Priests' Get – together

The Annual Priests' Get – together on the occasion of the feast of St. John Maria Vianney, the Patron saint of all diocesan priests will not take place this year at Madha Hill, Chetpet since 4 August 2019 falls on Sunday.

Hence, let us remember all our priests on this day and pray for them.

Wish you all a very HAPPY FEAST and God's abundant blessings. Let St. John Maria Vianney pray for us.

**Very Rev. Msgr. I. John Robert**
Vicar General

## PROCURATOR'S OFFICE

| S.No | Parish | Amount |
|---|---|---|
| 1 | Salai | 2020 |
| 2 | Thandrampet | 1000 |
| 3 | Nallur | 3540 |
| 4 | Ambur | 3000 |
| 5 | Uriurkuppam | 5000 |
| 6 | Semmiamangalam | 2300 |
| | **Total** | **16860** |

Thanks for all those who have already remitted the Good Friday Collection and May I request to give those who have not yet given.

**Very Rev. Fr. A.Kulandesu**
Procurator

## VELLORE SOCIAL SERVICE SOCIETY

நம் பாசமிகு ஆயர் அவர்கள் நம் மறைமாவட்ட மாணவ, மாணவிகள் அரசு துறையில் வேலைவாய்ப்பு பெற்றிட வேண்டும் என்ற முயற்சியில் அவர்களுக்கு சிறந்த அனுபவமுள்ள ஆசிரியர்களால் பயிற்சி அளித்திட வேண்டும் என்ற நோக்கத்தில் **St. Joseph PET Academy (St. Joseph Professional Education Training Academy)** ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பயிற்சிகள் : கிராம நிர்வாக அலுவலர் **(VAO)**, தமிழ்நாடு அரசு பணியாளர், வங்கி அலுவலர், இந்திய குடிமையில் பணிகள், **(Civil)**

**UPSC, IPS, IAS Exam &** இரயில்வே பணிகள், **RRB Exam** போன்ற பணிகளுக்கான பயிற்சி எதிர்காலத்தில் படிப்படியாக அளிக்கப்பட இருக்கின்றது.

<u>இடம்</u>

<u>வேலூர் மாவட்ட மாணவ, மாணவியர்களுக்கு :</u>

வேலூர் கத்தோ–க்க ஆயர் இல்லத்தில் உள்ள வேலூர் சமூக சேவை சங்க கருத்தரங்கு வடத்திலும்.

<u>திருவண்ணாமலை மாவட்ட மாணவ, மாணவியர்களுக்கு :</u>

திருவண்ணாமலை தென்றல் நகரில் உள்ள திருவண்ணாமலை சமூக சேவை சங்க கருத்தரங்கு கூடத்திலும் நடைபெறுகிறது.

நாள் & நேரம் : ஒவ்வொரு சனி & ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9.00 மணிமுதல் மாமல 5.00 மணிவரை.

செய்தி தொகுப்பு
பேரருட்திரு. **S.ஜேம்ஸ்,MSW**
இயக்குநர், **VSSS & TVMSSS**

## TIRUVANNAMALAI SOCIAL SERVICE SOCIETY

19.06.2019 அன்று மாலை 5.30 மணியளவில் திருவண்ணாமலை சமூக சேவை சங்கத்தில் நமது மறைமாவட்ட இளைஞர்கள் அரசு வேலை பெற்று பயன்பெற வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு St.Joseph PET Academy - TNPSC குரூப் தேர்வுகளுக்கான சிறப்பு பயறிச் மையம் உருவாக்கப்பட்டது. இந்த

பயிற்சி மையத்தில் பயிற்றுவிக்கும் தமிழ்நாடு அரசு தேர்வாணைய பயிற்சி ஆசிரியர்களுக்கான சிறப்புக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு திருவண்ணாமலை சமூக சேவை சங்கத்தின் இயக்குநர் தந்தை அருட்பணி. ச. ஜேம்ஸ் அவர்கள் தலைமை தாங்கி வழி நடத்தினார். இக்கூட்டத்தில் ஆசிரியர்கள் திரு. ரமேஷ் குமார், திரு. செந்தில், திரு. ரவி, திரு. செல்வகுமார், திரு. சிவா, திரு. சத்தியமூர்த்தி ஆகியோர்கள் கலந்து கொண்டனர். இவர்களை நமது பயிற்சி மையத்திற்காக தேர்ந்தெடுத்து, ஒருங்கிணைத்தவர் ஆசிரியர் திரு. ஆரோக்கியதாஸ் அவர்கள். இந்த ஆசிரியர்கள் அனைவரும் இத்துறையில் இப்பயிற்சி அளிப்பதில் பல ஆண்டுகள் அனுபவம் மிக்கவர்கள்.

இக்கூட்டத்தில் பயிற்சிக்காக மாணவர்களை எவ்வாறு ஒருங்கிணைப்பது என்றும், பயிற்சிக்கான பாடங்கள், பாடத்திட்டம், பயிற்சிக்கான கால அட்டவணை ஆகிய பற்றி விவாதிக்கப்பட்டு முறையான அட்டவணை தயார் செய்யப்பட்டது. திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள அனைத்து பங்கு குருக்களுக்கும் தொலைபேசி வாயிலாக பயிற்சி பற்றி மீண்டும் நினைவூட்டி பங்கில் உள்ள படித்த மாணவர்களை பயிற்சியில் பங்கேற்க செய்வது என முடிவு செய்யப்பட்டது.

இது ஒரு புது முயற்சி, மாணவர்களிடையே அரசுப்பணிக்கான விழிப்புணர்வாக இது அமைய வேண்டும், எதிர்காலத்தில் நமது மாணவர்களும் அரசுப்பணிகளில் பங்கேற்க வேண்டும் அதற்கு நிச்சயம் இது ஒரு பாலமாக, வழிக்காட்டியாக இந்நிறுவனம் அமையும், இப்பணி சிறப்பாக நிகழ்ந்திட பயிற்று ஆசிரியர்களின் ஒத்துழைப்பு அவசியம் எனக்கூறி வருகை புரிந்த ஆசிரியர்கள் அனைவருக்கும் இயக்குநர் தந்தை அவர்கள் நன்றி கூறி கூட்டத்தி முடித்தார்.

22.06.2019 சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் St. Joseph Pet Academyயில் TNPSC குரூப் தேர்வுக்கான சிறப்பு பயிற்சி வகுப்பினை திருவண்ணாமலை சமூக சேவை சங்கத்தின் இயக்குநர் தந்தை அருட்பணி. ச.ஜேம்ஸ் அவர்கள் தலைமை ஏற்று சிறப்பு ஜெப வழிப்பாட்டுடன் பயிற்சியை துவக்கி வைத்தார். இந்த பயிற்சியில் திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள கீழ்நாத்தூர், இளையாங்கண்ணி, தச்சாம்பாடி, தலையாம்பள்ளம், பெருந்துறைப்பட்டு, மருத்தவாம்பாடி, ஆரணி, அல்-யந்தல், ஆவூர், கெங்கப்பட்டு, சோமாசிபாடி ஆகிய 11 பங்குத்தளங்களில் இருந்து மாணவ மாணவிகள் பங்கேற்று பயிற்சி பெற்றனர்.

ஒருங்கிணைப்பாளர் ஆசிரியர் திரு. ஆரோக்கியதாஸ், பயிற்சி ஆசிரியர்கள் திரு. ரமேஷ் குமார், திரு. செந்தில், திரு. ரவி, திரு. செல்வகுமார், திரு. சிவா, திரு. சத்தியமூர்த்தி மற்றும் திட்ட அலுவலர் திரு. இன்பசேகர் ஆகியோரும் கலந்துக்கொண்டு இந்த பயிற்சியினை வழி நடத்தினர். பயிற்சியின் இறுதியில் இந்த பயிற்சியானது தொடர்ந்து வரும் எல்லா சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9.00 மணிமுதல் 5.00 மணிவரை தொடர்ந்து மூன்று மாதங்களுக்கு நடைபெறும். இப்பயிற்சியில் இன்னும் நிறைய மாணவர்கள் சேர்ந்து பயன்பெறும் வகையில் பிற மாணவர்களுக்கு எடுத்து சொல்-மாணவர்களின் சேர்க்கையை அதிகரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

| | |
|---|---|
| செய்தி தொகுப்பு | பேரருட்திரு. **S.ஜேம்ஸ்,MSW** |
| **L.தாமஸ் இன்ப சேகர்** | இயக்குநர், |
| திட்ட அலுவலர் | **VSSS & TVMSSS** |

# கோல்பிங் இந்தியா / வேலூர் மறைமாவட்டம்

16.06.2019 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 10.30 மணியளவில் பள்ளிகொண்டா கிளை பங்கான குருவராஜபாளையத்தில் பங்குத்தந்தை அருட்பணி. பெர்னார்ட் வேளாங்கண்ணி அவர்களால் சிறப்பு திருப்ப- நிறைவேற்றப்பட்டு கோல்பிங் புதிய குழு தொடங்கப்பட்டது. பங்குதந்தை வரவேற்புரையும், வாழ்த்துரையும் வழங்கினார்கள். கோல்பிங் இயக்கத்தின் தோற்றம், தந்தை அடால்ப் கோல்பிங் அவர்களின் வாழ்க்கை வரலாறு மற்றும் இயக்கத்தின் சட்டத்திட்டங்கள் பற்றி கோல்பிங் ஒருங்கிணைப்பாளர் திரு. V.S.ஜார்ஜ் அவர்களும், சிறுசேமிப்பு பற்றியும், கூட்டம் நடத்தும் முறை, பதிவேடுகளை குறித்தும் வேலூர் சமூக சேவை சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர் திரு. P.S.செ-ன் அவர்களும் விளக்கம் அளித்தனர். பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டு, பொறுப்புகள் பகிர்ந்தளிக்கப்பட்டன. துணைத்தலைவர் திரு. மரியபாபு நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவுபெற்றது. இதில் 20 உறுப்பினர்கள் பதிவு செய்து கொண்டனர்.

21.06.2019 வெள்ளிக்கிழமை அன்று காலை 10.30 மணியளவில் வேலூர் சமூக சேவை சங்க கருத்தரங்கு கூடத்தில் “சிறு குறு தொழில் முனைவோருக்கான செய்முறை பயிற்சி” VSSS இயக்குநர் பேரருட்திரு. S.ஜேம்ஸ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கோல்பிங் ஒருங்கிணைப்பாளர் திரு. V.S.ஜார்ஜ் அவர்கள் வரவேற்புரை வழங்கினார். VSSS திட்ட மேலாளர் திரு. A.பேட்ரிக் அவர்கள் பயிற்சி முன்னோட்டம், தனி நபர், குடும்பம், சமுதாயமாக வாழ்வாதாரத்தை உயர்த்தும் விதமாக நடைபெறப்போகும் பயிற்சி பற்றிய விளக்கம் தந்தார். பயிற்சியாளர்களாக திரு. A.பேட்ரிக், திருமதி. இளமதி, திருமதி.

குப்பு ஆகியோர் தொழில் முனைவோருக்கான செய்முறை பயிற்சியாக காகித உறைகள், பல்சுவை உணவு வகைகள் ஆகியவற்றை தயாரித்தும், அதற்கான செலவினங்கள், இலாபம், விற்பனை ஆகியன குறித்தும் திட்டமிட்டனர். பயிற்சி மதிப்பீடு செய்யப்பட்டது. இயக்குநர் அவர்கள் மக்களின் வாழ்வாதாரம் உயர வாழ்த்தி ஆசீ வழங்கினார். பெண்கள் ஒருங்கிணைப்பாளர் திருமதி. **P.S.**செ–ன் அவர்கள் நன்றி கூற பயிற்சி இனிதே நிறைவுற்றது. கோல்பிங் உறுப்பினர்கள் 35 நபர்கள் பங்கேற்று பயன் அடைந்தனர்.

செய்தி தொகுப்பு

திரு. **V.S. ஜார்ஜ்**
ஒருங்கிணைப்பாளர்

பேரருட்திரு. **S.ஜேம்ஸ்,MSW**
இயக்குநர், வேலூர்

## HUNGER AND DISEASE FUND COLLECTION – 2019

| S. NO. | DATE | PLACE | AMOUNT RS. |
|---|---|---|---|
| 1 | 17.05.2019 | Viruduvilanginan | 2,500 |
| 2 | 17.05.2019 | Thachambadi | 39,001 |
| 3 | 22.05.2019 | Polur | 5,000 |
| 4 | 23.05.2019 | Maruthuvambadi | 20,000 |
| 5 | 23.05.2019 | Eleanganni | 10,300 |
| 6 | 01.06.2019 | Gengapuram | 650 |
| 7 | 06.06.2019 | Soganur | 720 |
| 8 | 06.06.2019 | Thandarampet | 500 |
| 9 | 06.06.2019 | Nallur | 2,800 |
| 10 | 18.06.2019 | Anthoniyar Nagar | 2,000 |
| 11 | 18.06.2019 | Ambur | 5,000 |

| | | | |
|---|---|---|---|
| 12 | 18.06.2019 | Uriurkuppam | 2,000 |
| 13 | 21.06.2019 | Semiamangalam | 1,200 |
| | | **TOTAL** | **91,671** |

செய்தி தொகுப்பு
திரு. **A.பேட்ரிக்**
திட்ட மேலாளர்

பேரருட்திரு. **S.ஜேம்ஸ்,MSW**
இயக்குநர்,
வேலூர் சமூக சேவை சங்கம்

## BANK LOAN FOR EDUCATION கல்விக்கடன்

1. கல்விக்கடன் வழங்கப்படும் படிப்புகள்

பல்கலைக்கழக மானியக்குழு அகில இந்திய தொழில் நுட்பக் கல்வி கவுன்சில் போன்ற அரசு அமைப்புகள் மற்றும் அரசு அங்கீகாரம் பெற்ற கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் அங்கீகரிக்கப்பட்ட இளநிலை பட்டப்படிப்பு, முதுநிலை பட்டப்படிப்பு, முதுநிலை டிப்ளமோ படிப்புகளிலும் சேர்ந்துள்ளவர்கள் கல்விக்கடன் கேட்டு பொதுத்துறை வங்கிகளில் விண்ணப்பிக்கலாம்.

சிறந்த வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள் இந்தியாவில் நடத்த அங்கீகாரம் பெற்ற படிப்புகளில் சேருபவர்களுக்கும் கல்விக்கடன் கிடைக்கும். இது தவிர அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களின் அங்கீகரிக்கப்பட்ட வேலை வாய்ப்பு வழங்கக்கூடிய படிப்புகளுக்கும் கல்விக்கடன் வழங்குவது குறித்து வங்கிகள் பரிசீலனை செய்யும். அத்துடன் வெளிநாடுகளில் உள்ள தரம் வாய்ந்த பல்கலைக்கழகங்களில் படிக்க தேர்வு செய்யப்பட்ட மாணவர்களும் கல்விக்கடன் பெறலாம்.

பத்தாம் வகுப்பு படித்துவிட்டு பா–டெக்னிக், ஐடிஐ போன்ற கல்வி நிறுவனங்களில் டிப்ளமோ படிப்புகளில் சேரும் மாணவர்களுக்கு

கல்விக்கடன் கிடைக்கும். அதாவது பத்தாம் வகுப்பு படித்துவிட்டு தொழில்நுட்ப மற்றும் தொழில் பயிற்சிப் படிப்புகளில் சேரும் மாணவர்களுக்கும் வங்கிகளில் கல்விக்கடன் பெற தனித்திட்டம் உள்ளது. ஆனால் கல்விக்கடன் வட்டிச் சலுகை மட்டும் கிடைக்காது.

2. கல்விக்கடன் அளவு

இந்தியாவில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் அங்கீகரிக்கப்பட்ட படிப்புகளில் படிப்பதற்கு அதிகபட்சமாக ரூ.10 லட்சம் வரை கல்விக்கடன் பெறலாம். வெளிநாடுகளில் படிப்பதற்கு ரூ.20 லட்சம் வரை கல்விக்கடன் வழங்கப்படுகிறது.

3. கல்விக்கடன் பெற நிபந்தனைகள்

3.1. முன்பணம்

ரூ.4 லட்சம் வரை கல்விக்கடன் பெறுவதற்கு வங்கிகளில் முன்பணம் எதுவும் செலுத்த வேண்டியதில்லை. இந்தியாவில் படிக்க ரூ.4 லட்சத்துக்கு மேல் கல்விக்கடன் வாங்கினால் கடன் தொகையில் 5 சதவீதமும், வெளிநாடுகளில் படிக்க ரூ.4 லட்சத்துக்மேல் கல்விக்கடன் தொகையில் 15 சதவீதமும் முன்பணமாக மாணவர்கள் செலுத்த வேண்டியிருக்கும்.

3.2 இன்சூரன்ஸ்

கல்விக்கடன் விண்ணப்பிக்கும் மாணவர்கள், இன்சூரன்ஸ் திட்டத்தில் சேரவேண்டும் என்ற விதிமுறை கொண்டுவரப்பட்டுள்ளது. குறைந்த பிரீமியம் செலுத்தவேண்டியிருக்கும். இந்தக் கல்விக்கடன் பெறும் மாணவர்கள் எதிர்பாராத விதமாக இறந்துபோனால் அவர்கள் செலுத்த வேண்டிய கடன் தொகையை இன்சூரன்ஸ் நிறுவனம் வங்கிகளுக்குச் செலுத்திவிடும் சம்பந்தப்பட்ட குடும்பங்களுக்கு அந்தக் கல்விக்கடன்

பெருஞ்சுமையாக இருக்கக்கூடாது என்பதற்காகத்தான் இந்த ஏற்பாடு.

### 3.3 ஜாமின் அல்லது உத்தரவாதம்

ரூ. 4 லட்சம் வரை கடன் வாங்கினால் மாணவர்களின் பெற்றோர்கள் கையெழுத்திட்டால் போதும். செக்யூரிட்டி எதுவும் தேவையில்லை. ரூ.4 லட்சத்தி-ருந்து ரூ. 7.5 லட்சம் வரை கடன் வாங்கினால் அதற்கு மாணவர்களின் பெற்றோர்கள் உத்தரவாதம் அளிக்க வேண்டும். ரூ.7.5 லட்சத்துக்கு மேல் கடன தேவைப்பட்டால் பெற்றோரின் சொத்து உத்தரவாதமும் (with tangible collateral security of suitable value) வேண்டியிருக்கும். இந்த தொகைக்கு வட்டியில் மானியம் தரப்படும்.

### 4. வங்கிக்கடன் திரும்ப செலுத்தும் முறை

படிப்பை முடித்த ஓராண்டி-ருந்து கல்விக்கடனைத் திரும்பிச் செலுத்த வேண்டும் என்ற புதிய முறை கொண்டுவரப்பட்டுள்ளது. கல்விக்கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான காலம் 15 ஆண்டுகளாக உயர்த்தப்பட்டுள்ளது.

### 5. ஒரே குடும்பத்தில் பலர் கடன் பெறலாம்

ஒரே குடும்பத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் உயர்கல்வி படித்தாலும் அவர்கள் அனைவரும் படிக்க வங்கிகளில் கல்விக்கடன் பெறலாம். ஒரு குடும்பத்தில் ஒரு மாணவருக்கு கல்விக்கடன் வாங்கினாலும் கூட அந்த மாணவரின் சகோதர, சகோதரர்கள் படிக்க வங்கிகள் கல்விக்கடன் வழங்கத் தடையில்லை.

### 6. விண்ணப்பம்

வங்கிகளில் கல்விக்கடன் பெறுவதற்கு இந்தியப் பிரஜையாக இருக்க வேண்டியது அவசியம். வங்கிகளில் கல்விக்கடன் பெறுவதற்கு ஆண்டு

முழுவதும் விண்ணப்பிக்கலாம். இந்த வங்கியில்தான் கல்விக்கடன் பெற முடியும் என்கிற விதி எதுவும் இல்லை. கல்விக்கடன் பெறுவதற்கு சர்வீஸ் ஏரியா அப்ரோச் முறை இல்லை. கல்விக்கடன் பெற எந்த வங்கியையும் அணுகலாம். வங்கிகளில் கல்விக்கடன் பெறுவதற்கு முன்னதாக அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனத்தில், அங்கீகரிக்கப்பட்ட பாடப்பிரிவில் அட்மிஷன் வாங்கி இருக்க வேண்டும். சம்பந்தப்பட்ட கல்வி நிறுவனத்திடமிருந்து படிப்புக்கு ஆகும் செலவு குறித்த எஸ்டிமேட் தேவை.

தற்போது வித்யாலட்சுமி திட்டத்தை மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ் வங்கிகள் மூலம் கல்விக்கடன் பெறுவதற்கு இணையதளத்தின் வழியாக விண்ணப்பித்தால் அவை நாம் விரும்பும் மூன்று வங்கிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டு கல்விக்கடன் பெற முடியும். இது குறித்த விவரங்களுக்கு வித்யாலட்சுமி கல்விக்கடன் திட்டத்துக்கான இணைய தளத்தைப் **(www.vidyalakshmi.co.in)** பார்க்கவும். வங்கிகளை அணுகியும் இது குறித்த விவரங்களைக் கேட்டறியலாம்.

மாணவர்களுக்கு கல்விக்கடன் வழங்குவதற்கு பரிசீலனை செய்ய 15 நாட்கள் முதல் ஒரு மாதம் வங்கிக் கிளைகள் கால அவகாசம் எடுத்துக்கொள்ளலாம்.

வங்கிக்கடன் பெற உதவும் இணையதளங்கள்

**www.vidyalakshmi.co.in**

**www.iba.org.in**

**www.eltf.in**

**அருள்பணி. சு. லூர்துசாமி**
செயலர், பொதுநிலையினர் பணிக்குழு
**94873 21179**

# பக்த சபைகள் – மரியாயின் சேனை

தூய விண்ணேற்பு அன்னை பேராலயம் – வேலூர் கொமித்சியம் ஆண்டறிக்கை

மே – 2018 முதல் ஜூன் – 2019 வரை

கொமித்சியத்தின் கீழ் இயங்கும் மொத்த கியூரியாக்கள் 10. அவை: வேட்டவலம், திருவண்ணாமலை, வந்தவாசி, சேத்துப்பட்டு, போளூர், சந்தவாசல், திருப்பத்தூர், காட்பாடி, அரக்கோணம், ராணிப்பேட்டை.

மொத்த நேரடி பிரசிடியங்கள் – 10. ஆன்ம இயக்குனராக பேரருட்பணி. ஜெ.ஜெயபிரகாசம் அடிகளாரும், அவருடன் இணைந்து தலைவர், துணைத்தலைவர், செயலர், பொருளர், நான்கு அலுவலர்கள் செயலாற்றுகின்றனர்.

மாதத்தின் இரண்டாம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு கொமித்சிய கூட்டம் நடைபெறுகின்றது. சராசரியாக கியூரியா, பிரசிடிய அலுவலர்கள் 35 பேர் வருகை தருகின்றனர்.

ஒவ்வொரு மாதமும் கியூரியா, பிரசிடியங்கள் சந்திக்கப்பட்டு ஆலோசனை வழங்கியும், ஊக்குவித்தும், உற்சாகப்படுத்தியும் வருகின்றோம். ஒவ்வொரு உறுப்பினரும் மற்றொரு உறுப்பினரை அழைத்து வர ஆலோசனை வழங்கப்படுகிறது.

சேனை வீரர்களின் சேவை தொகுப்பு

| | | |
|---|---|---|
| சந்தித்த கத்தோ–க்க குடும்பங்கள் | – | 2008 |
| இந்து குடும்பங்கள் | – | 800 |
| இதர கிறிஸ்தவ குடும்பங்கள் | – | 500 |
| முகமதியர் குடும்பங்கள் | – | 50 |
| | | 2358 |

| | | |
|---|---|---|
| சந்தித்து ஜெபித்த குடும்பங்கள் | - | 40 |
| திரு இருதய ஆண்டவர் படம் ஸ்தாபித்தது | - | 36 |
| மறைகல்வி கற்பிக்கும் சகோதர சகோதரிகள் | - | 35 |
| புது நன்மை பெற தயார் செய்ப்பட்டவர்கள் | - | 10 |
| ஒப்புரவு அருளடையாளம் பெற உதவியது | - | 15 |
| திருமண சீர்திருத்தம் செய்தது | - | 05 |
| நோயுற்றோருக்கு நன்மைப் பெற உதவியது | - | 08 |
| மரித்தோர் இல்லம், அடக்கச் சடங்கில் பங்கேற்றது | - | 100 |
| மருத்துவமனையில் நோயாளிகளை சந்தித்து ஆறுதல் கூறி செபித்தது | - | 2000 |
| 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவ, மாணவிகளுக்காக செபித்து, உற்சாகப்படுத்தியது | - | 200 |
| அகில உலக சேனையர், மரித்த சேனையர்களின் கல்லறைக்கு சென்று செபித்தது மற்றும் முதியோர் இல்லம் அனாதை இல்லங்களுக்கு சென்று ஆறுதல் கூறியது | - | 300 |

அனைத்து கியூரியாக்களிலும், பிரசிடியங்களிலும் மே மாதம் 2018 முதல் ஜுன் 2019 வரை மேலே குறிப்பிட்ட நற்காரியங்கள் நடைபெற்றன.

மிகச்சிறப்பாக, அக்டோபர் மற்றும் மே மாதங்களில் ஜெபமாலை சொல்லப்பட்டது. இதனால் ஜெபமாலைப் பக்தி எல்லா கியூரியாக்களிலும், பிரசிடியங்களிலும் பரவ ஏதுவாக இருந்தது.

செய்தி தொகுப்பு
சகோ. **ரத்னாமேரி**
கொமித்சியத் தலைவி

அருட்பணி. **ஜெ.ஜெயபிரகாசம்**
இயக்குநர், பக்தசபைகள்

**Birth Day**

| | |
|---|---|
| 1. Fr. L. Susainathan | 02-07-1956 |
| 2. Fr.P. Gnanasekar | 17-07-1982 |
| 3. Msgr. M. Joe Lourdusamy | 24-07-1956 |
| 5. Fr. S. Malaiyappan | 25-07-1964 |
| 6. Fr. M. Amalanathan | 27-07-1975 |

**Ordination**

| | |
|---|---|
| 1. Fr. L. John Stephan | 20-07-1998 |
| 2. Fr. S. Gunasekaran | 21-07-2019 |
| 3. Fr. B. Jerold | 21-07-2019 |

**Necrology**

| | |
|---|---|
| 1. Rev. Fr. Francis Cusini SDB | 03.07.1963 |
| 2. Rev. Fr. Joseph Baracca SDB | 03.07.1996 |
| 3. Rev. Fr. K.K. Thomas SDB | 06.07.2007 |
| 4. Rev. Fr. Lourdunathan Arockiasamy SDB | 09.07.2000 |
| 5. Rev. Fr. Celestine Mauri SDB | 10.07.1961 |
| 6. Rev. Fr. John Antheenat | 10.07.2006 |
| 7. Rev. Fr. S. Susai | 11.07.1994 |
| 8. Rev. Fr. D. A. Arockiasamy | 15.07.1992 |
| 9. Most Rev. David Marianayagam SDB | 16.07.1969 |
| 10. Rev. Fr. Viadimir Ondrasek SDB | 16.07.1977 |
| 11. Rev. Fr. Joseph Amaladossan SDB | 16.07.1979 |
| 12. Rev. Fr. P. J. Thomas | 17.07.1997 |

13. Rev. Fr. S. P. Antony 19.07.1976

14. Rev. Fr. Joseph Cheruvil 28.07.2003

15. Rev. Fr. Divita SDB 29.07.1983

**Intentions**

Let us pray that those who administer justice may work with integrity and that the injustice which prevails in the world may not have the last word.

**Calender**



| | | |
|---|---|---|
| 03 | Wed | St. Thomas, The Apostle of India, Sol |
| 04 | Thu | St. Elizabeth of Portugal |
| 06 | Sat | St. Maria Goretti, Second Patroness of our Diocese |
| 07 | Sun | 14th Ordinary Sunday |
| 11 | Thu | St. Benedict, Mem |
| 13 | Sat | St. Henry |
| 14 | Sun | 15th Ordinary Sunday |
| 16 | Tue | Our Lady of Mt. Carmel |
| 21 | Sun | 16th Ordinary Sunday |
| 22 | Mon | St. Mary Magdalene, Feast |
| 25 | Thu | St. James Ap, Feast |
| 26 | Fri | Ss. Joachim & Anne, Parents of BMV |
| 28 | Sun | 17th Ordinary Time |
| 31 | Wed | St. Ignatius of Loyola, Mem |

**RIP**

In your Charity Kindly pray for the repose of the soul of Mrs. Kamala Noel Mary beloved mother of Rev. Fr. S. M. Anandaraj who passed away on 09.06.2019. May her soul rest in peace.

In your Charity Kindly pray for the repose of the soul of Mrs. Santhi Mary beloved mother of Rev. Fr. A. Yesu Durai who passed away on 24.06.2019. May her soul rest in peace.